# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (ஞாயிற்றுக்கிழமை) ● திருவள்ளுவர் ஆண்டு 2056, மார்ச் 23, 2025

Weekly E-paper ● March 23, 2025






# இது ஒரு வரலாற்றுப் பதிவு!

சுப.வீரபாண்டியன்

## பாசிசத்திற்கு எதிரான ஸ்டாலின் குரல்

நூல் வெளியீட்டு விழா

## ஐயோ பாவம் !

தலையங்கம்

## இயக்கச் செய்திகள்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (ஞாயிற்றுக்கிழமை) ● திருவள்ளுவர் ஆண்டு 2056, மார்ச் 23, 2025 Weekly E-paper ● March 23, 2025


# இது ஒரு வரலாற்றுப் பதிவு!

சுப.வீரபாண்டியன்



1969 ஆம் ஆண்டு முதலமைச்சராகப் பதவியேற்றவுடன் தலைவர் கலைஞர் அவர்கள், அண்ணாவின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் மாநில சுயாட்சி பற்றி ஆய்வு செய்து அறிக்கை தருவதற்காக ராஜமன்னார் குழுவை நியமித்தார்.

1974 ஏப்ரல் 20 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் அந்த ராஜமன்னார் குழுவின் அறிக்கையை அரசு முன்வைத்து ஏற்றது ! அந்த நிகழ்வுதான் இந்தியாவில் உள்ள மற்ற எல்லா மாநிலங்களுக்குமான முதன்மை வழிகாட்டியாக இருந்தது !

இப்போதும் மீண்டும் அதே பாதையில், பாதிக்கப்பட்ட மாநிலங்களின் தலைவர்கள் எல்லாரையும் ஒன்று கூட்டி, தொகுதி மறு சீரமைப்புத் திட்டத்தை இன்னும் 25 ஆண்டுகளுக்குத் தள்ளி வைக்குமாறு ஒரு தீர்மானத்தை சென்னையில் இன்று தமிழ்நாடு அரசு நிறைவேற்றியுள்ளது !

இன்று நடைபெற்ற கூட்டத்தில் ஏழு மாநிலங்களைச் சேர்ந்த இருபதுக்கும் மேற்பட்ட தலைவர்கள் கலந்து கொண்டுள்ளனர்! மேற்கு வங்கம் முதல்வர், தன் ஆதரவைத் தொலைபேசியில் தெரிவித்து இருக்கிறார். ஜார்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன் தன்னுடைய ஆதரவையும் இப்போது தெரிவித்துள்ளார்!

மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறு சீரமைப்பு திட்டத்தைக் கொண்டு வருவதன் மூலம், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை ஒழுங்காகப் பின்பற்றிய மாநிலங்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகின்றன என்பதை இன்றைய கூட்டம் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளது !

தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் இது குறித்துத் தெளிவான செய்தி ஒன்றைக் கூறியிருக்கிறார். மறு சீரமைப்பு என்பது தொகுதிகளோடு மட்டும் தொடர்புடையது அன்று, இது மாநில சுயாட்சியோடு தொடர்புடையது என்பதே அவர் கருத்து! அது நூற்றுக்கு நூறு சரியானது !





பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட இந்தியா போன்ற ஒரு நாட்டில், மாநிலங்கள் வெறும் நிர்வாக இயந்திரத்தின் ஒரு பகுதியாக மட்டும் இருந்துவிட முடியாது! ஒரு மாநிலத்தில் பல மாவட்டங்கள் இருப்பது போல, இந்தியாவில் மாநிலங்களைக் கருத வாய்ப்பில்லை!

எனவே தொகுதி மறு சீரமைப்பு என்பது, கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரான – ஜனநாயக உரிமைகளுக்கு மாறான – ஒரு திட்டமாகவே அமையும்! அதனைச் சரியான நேரத்தில், சரியானவர்களை ஒன்று கூட்டி இந்தியாவிற்கும், இந்திய ஒன்றிய அரசுக்கும் தெரிவித்திருக்கிற தமிழ்நாடு அரசு பாராட்டிற்குரியது!

இன்று சென்னையில் நடந்தது, வெறும் கூட்டம் அன்று, ஒரு வரலாற்றுப் பதிவு! ●





சென்னை அன்பகத்தில் 19-03-2025 அன்று நடை பெற்ற ‘பாசிசத்திற்கு எதிரான ஸ்டாலின் குரல்’ நூல் வெளியீட்டு விழாவில் தோழர்கள் செல்வின் சௌந்தர்ராசன், அ.லாரன்ஸ் முன்னிலை வகிக்க, பெல் இராசன் வரவேற்புரையாற்ற, பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் தலைமையில் மாண்புமிகு அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் நூலை வெளியிட்டு நூலறிமுக உரையாற்றினார். நிகழ்ச்சியில் தி.க.துணைப் பொதுச் செயலாளர் மதிவதனி கருத்துரை வழங்க, தோழர் இக்லாஸ் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்.


அமைச்சர் வருகை


மேடையில்


அமைச்சர் உரை


நூல்வெளியிடும் அமைச்சர்


பேரா. சுப.வீரபாண்டியன்


பெல் இராஜன்


மதிவதனி


இக்லாஸ்



தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## ஐயோ பாவம் !

சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டதாம். போதைப்பொருள் பெருகிவிட்டதாம். டாஸ்மாக்கில் ரூபாய் 1000 கோடி ஊழலாம். பொழுது விடிந்தால் போதும், இப்படி எல்லாம் உளறத் தொடங்கி விடுகிறார் அண்ணாமலை.

அவருக்கு பாஜக ஆட்சி செய்யும் உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், குஜராத், மகராஷ்டிரம் போன்ற மாநிலங்களில் என்ன நடக்கிறது என்று தெரியாதா?

போதைப்பொருள் கடத்தலில் முதலிடம் குஜராத், இரண்டாவது இடம் மகாராஷ்டிரம் என்று ஒன்றிய அமைச்சர் ஒருவர் சொன்னது கூடத் தெரியவில்லை போலும்.

தமிழ்நாட்டில் டாஸ்மாக் ஊழல் ரூபாய் 1000 கோடி என்று அலறுகிறார் அண்ணாமலை.

தமிழ்நாட்டில் டாஸ்மாக் விவகாரத்தில் அ.தி.மு.க.வின் ஆட்சியின்போது பதிவு செய்யப்பட்ட FIR 34. திமுக ஆட்சியில் 7, மொத்தம் 41. இங்கே அமலாக்கத்துறை தலையிட வேண்டும் என்றால் ரூபாய் 30 லட்சத்திற்கு மேல், குற்றம் நடந்திருக்க வேண்டும். தி.மு.க ஆட்சியில் பதியப்பட்ட 7 வழக்குகளில் 30 லட்சம் வராது. அதனால் அ.தி.மு.க. ஆட்சியின் 34 ஐயும் சேர்த்து வழக்கு 41 என்று அமலாக்கத் துறை நுழைந்து இருப்பதாக ஒரு ஊடகவியலாளர் சொல்லி இருப்பது அண்ணாமலையின் காதுகளில் விழவில்லையோ?அ.தி.மு.க. ஆட்சியின்போது என்ன செய்துகொண்டு இருந்தார் அவர்? அப்போது ஒன்றிய ஆட்சியும் பா.ஜ.க.தானே!

சரி அது போகட்டும். 1000 கோடி ஊழல் என்பதற்கு என்ன சான்று இருக்கிறது? சொல்வாரா மிஸ்டர் அண்ணாமலை!

தமிழ்நாட்டில் பாலியல் குற்றங்கள் பெருகிவிட்டதாம். இல்லையென்று சொல்லவில்லை, அதற்குரிய நடவடிக்கைகளைக் காவல்துறை எடுத்து வருகிறது.

அ.தி.மு.க. ஆட்சியில் பொள்ளாச்சியில் நடந்த பாலியல் வன்முறை குறித்து அண்ணாமலை ஏன் பேசுவது இல்லை? மணிப்பூர், உத்தரப் பிரதேசம் போன்ற பா.ஜ.க ஆளும் மாநிலங்களில் பாலியல் குற்றங்கள் சீரழிகிறதே! அண்ணாமலைக்கு இது தெரியாதா?

இந்தி-சமஸ்கிருதத்தை எதிர்த்துத் தாய்மொழி காக்கப்போராடும் தமிழர்களைக் கொச்சைப்படுத்தும் அண்ணாமலை, ஆட்சிக்கு வந்தவுடன் இந்தியைப் பாடமொழியாக்கி மும்மொழித் திட்டத்தை அமுல்படுத்தி விடுவாராம்.

அத்தைக்கு மீசை முளைத்து சித்தப்பாவானால்தான், தமிழ்நாட்டில் பா.ஜ.க ஆட்சி! அதுவரையும் அவர் இப்படித்தான் இருப்பார் போலும்,ஐயோ பாவம்!




அன்னை மணியம்மையார் அவர்களின் நினைவாக 16-03-2025 அன்று திராவிடப் பள்ளி, திராவிடர் வரலாற்று ஆய்வு மையம் இணைந்து நடத்திய 'திராவிட நடை' நிகழ்வைப் புதிய குரல் நிறுவனர் தோழர் ஓவியா, திராவிட கழக துணைப் பொதுச் செயலாளர் பிரின்சு என்னாரெசு பெரியார், திராவிடப் பள்ளி இணை ஒருங்கிணைப்பாளர் தோழர் வெற்றிச்செல்வன் ஆகியோர் ஒருங்கிணைத்தனர். நிறைவில் மணியம்மையார் சிலைக்குப் பேரவை சார்பில் வீரவணக்கம் செலுத்தப்பட்டது.

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**
பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**
உதவி ஆசிரியர்கள்:
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**
வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**
இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408




திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் துணை அமைப்பான திராவிட மாணவர் பேரவையின் மாநில அமைப்பாளர் **தோழர் நெல்லை பாபு** அவர்களின் பரிந்துரையை ஏற்று கீழ்க்கண்டவர்கள் பொறுப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள் :

### திருநெல்வேலி :

மாவட்ட அமைப்பாளர்: வ. தமிழரசன் (6369322291)
துணை அமைப்பாளர்கள்: கே. சரவணன் (7010529849)
மா ஜெயசூரியா (9952355054)
மாநகர அமைப்பாளர்: டி. ஆப்ரஹாம் சாமுவேல் (9791512028)
மாநகர துணை அமைப்பாளர்: ஆர். தினேஷ் கண்ணா (9360751882)

### கன்னியாகுமரி:

மாவட்ட அமைப்பாளர்: டி.பி. ஜோதிஷ் (9789607783)

### தென்காசி மாவட்டம்

அமைப்பாளர்: மோ. ரூபஸ் (9159801565) தொகுதி: தென்காசி சட்டமன்றம்

துணை அமைப்பாளர்கள்:
சீ. டாரிஸ் ஜிந்தகி (9994133662) தொகுதி: வாசுதேவநல்லூர் சட்டமன்றம்
ஜோ.சுஜய் (90250 11124) தொகுதி: கடையநல்லூர் சட்டமன்றம்
து.கவின் (95003 24125) தொகுதி: தென்காசி சட்டமன்றம்
சுபாஸ் சந்திரபோஸ்(86759 99111) தொகுதி: வாசுதேவநல்லூர் சட்டமன்றம்

தென்காசி நகர அமைப்பாளர் இ. கருப்பசாமி (9952541793)
தென்காசி ஒன்றிய அமைப்பாளர் சு.அஸ்வின் ராஜ் (6369320478)
புளியங்குடி நகர அமைப்பாளர் பா.நாராயாணன் (9514168594)
கடையநல்லூர் ஒன்றிய அமைப்பாளர் செ.கார்த்திக் குமார் (9751513396)
செங்கோட்டை ஒன்றிய அமைப்பாளர் ம.முகம்மது ரியாஸ் (6379380194)
சங்கரன்கோவில் ஒன்றிய அமைப்பாளர்
மு.கணகவேல் மாதவன் தொடர்பு எண்: 9361274597
கீழப்பாவூர் ஒன்றிய அமைப்பாளர் த.மணியம்மை (7358571843)
செங்கோட்டை நகர அமைப்பாளர்: மா.விமல்
சுந்தரபாண்டியபுரம் பேரூர் அமைப்பாளர் இ.இசக்கிராஜ் (8056425873)

### கோவை மாநகர் மாவட்டம்

அமைப்பாளர்
தோழர் மதியரசன் (91 63796 57988)

### கோவை புறநகர் மாவட்டம்

அமைப்பாளர் தோழர் சிகான் (9585056396

### ஈரோடு மாவட்டம்

மாவட்ட அமைப்பாளர்
சுகிதா
க.ஜெயசூர்யா (91 63745 63502)
ச.அஸ்வின் (63839 65496)
வீ. சித்தேஷ் (90250 13907)

### சேலம் மாவட்டம்.

மாவட்ட அமைப்பாளர்
தோழர் முனிசா (93842 60484)
மாநகர அமைப்பாளர்
தோழர் ஹரிஸ் (720062 5080)

**–சிற்பி செல்வராஜ்,**
பொதுச்செயலாளர்.

மாநில இளைஞர் அணிச் செயலாளர் **சந்தானம்** பரிந்துரையை ஏற்று கீழ்கண்ட தோழர்கள் பேரவையின் மாநில / மாவட்ட பொறுப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள். **சென்னை திருக்குறளார்** மாநில இளைஞர் அணித் துணைச் செயலாளர்களில் ஒருவராகவும், கீழ்கண்ட தோழர்கள் மாவட்டப் பொறுப்பாளர்களாகவும் நியமிக்கப்படுகிறார்கள்:

### செங்கல்பட்டு மாவட்டம்

எஸ்.முல்லைவேந்தன், பா. ஆல்வின் அலெக்ஸ் (9600 360 843)
ஆர்.நாகராஜன், அருண் (7373066600), ஜெகன்

### பெரம்பலூர் மாவட்டம்

மாவட்ட தலைவர் ராஜதுரை(9003088030)
மாவட்ட செயலாளர் விடுதலைச்செல்வன், (9159318704)
மாவட்ட பொருளாளர் பிரபாகரன், (6383916477)

### திருவண்ணாமலை (வடக்கு)

மாவட்ட இளைஞர் அணித்தலைவர் தி.க.சு.உதயகுமார், (9443492218)
இளைஞர் அணி செயலாளர் ப.வெங்கடேசன், (9884326334)
இளைஞர் அணி பொருளாளர் M.குணசேகர், (9965147433)

### இராணிப்பேட்டை மாவட்டம்

மாவட்ட செயலாளர் இரா.நவீன்குமார், (81222 27419)
மாவட்ட பொருளாளர் பி.ஜெயகுமார், (8608895653)

செயற்குழு உறுப்பினர்கள்
பி.உதயகுமார் (7871757128), எம்.அஜித் குமார் (7200732552)
ம சக்திவேல் (செல்:8838254404)
இரா. தென்றல்ராஜ் ( 9943604225),
தா சபரி (9514499158),
A அரவிந்த் (91904757203)
சரண் (91936083689)
நா நவீன் குமார் (908009300 / 6383916477)

### காஞ்சிபுரம் மாவட்டம்

தமிழரசன் (96775 19148), ராமகிருஷ்ணன் (செல்: 9655281381)
நித்யானந்தம் செல்: 6380042339, ராசு செல்:9840941743

### தென்காசி மாவட்ட இளைஞர் அணி பொறுப்பாளர்கள்

தலைவர் எட்வின்ஜெயராஜ், (91596 21674) தென்காசி
துணைத்தலைவர் மு.க.சிவானி, (6383162842) கடையநல்லூர்
செயலாளர் எஸ். கதிர், (90038 57893) தென்காசி

துணைச் செயலாளர்கள்
ஆர்.அழகு (96005 22178) தென்காசி,
ஜ.ரபீக் ராஜா (74180 88789) கடையநல்லூர்.
ச.சுந்தர் (9994540952) வாசுதேவநல்லூர்

இளைஞர் அணி செயலாளர் செ.மனோஜ் குமார், கடையநல்லூர் ஒன்றியம்(9751513396)

ஒன்றிய இளைஞர் அணி செயலாளர் மு.முத்துவேல், தென்காசி (6382989443)
ஒன்றிய இளைஞர் அணி செயலாளர் ஜோஸ்வா.அ, (8883387876), செங்கோட்டை
வாசுதேவநல்லூர் ஒன்றிய இளைஞர் அணிச் செயலாளர் கௌ.ராம்குமார் (6374445867)
நகர இளைஞர் அணி செயலாளர் சா.இரத்தின பிரகாஷ்,

### கோவை புறநகர் மாவட்டம்

இளைஞர் அணி தலைவர் விஜய் (916374656116)
இளைஞர் அணி செயலாளர் சிறி ஹறி (7708899219)
அமைப்பாளர் அஜித், கா.க.புதூர் (9360788361) ஆனைமலை

### கோவை மாநகர் மாவட்டம்.

தோழர் தமிழ்ச்செல்வன், அமைப்பாளர் (72003 70701)
தோழர் சா.ஈ.கௌதம் மாநகரச் செயலாளர் (8098507810)

### திருப்பூர் புறநகர் மாவட்டம்:

திருப்பூர் மாநகர் மாவட்ட அமைப்பாளர் தோழர் கர்ணராஜ் (9944795077)
தலைவர்: மதன், செயலாளர்: அரவிந்த்

### ஈரோடு புறநகர் மாவட்டம்

மாவட்ட தலைவர் தோழர் ஆதி (7010859418)
செயலாளர் பாலமுருகன் (9790210464)
அமைப்பாளர் அருண், (6374885668)

### சேலம் மாவட்டம்

மாவட்டத் தலைவர் தோழர் பவித்ரா குமரன் (9600442988)
செயலாளர் தோழர் பிரவீன் குமார் (9944382120)

### மதுரை மாவட்டம்

மாவட்ட இளைஞரணி தலைவர் பா.பகலவன் (75500 98327)
மாவட்ட இளைஞரணி செயலாளர் கார்த்திகேயன்.பி, (81222 27419)

**–சிற்பி செல்வராஜ்,**
பொதுச் செயலாளர்.

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian